# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

# சத்துணவு திட்டம்

திருப்பூர் மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 262 சமையல் உதவியாளர் பணியிடங்கள் வட்டாரங்கள் வாரியாக நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளது.

சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும்.அவ்வாறு பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு காலம் பணிக்கு பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 Level of Pay ரூ.3000-9000) ஊதியம் வழங்கப்படும்.

இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படும்.

**வயது வரம்பு:**

1. 21 வயது முதல் 40 வரை (பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்)
2. 18 முதல் 40 வரை (பழங்குடியினர்)
3. 20 முதல் 40 வரை (விதவை கணவனால் கைவிடப்பட்டோர்)

குறைந்தபட்சம் கல்வித்தகுதி 10 ஆம் வகுப்பு தோல்வி/ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக பேசத் தெரிந்திருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ........க்குள் இருக்க வேண்டும் (ஊராட்சி - குக்கிராமம் - வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை.)

மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு கீழ்கண்ட குறைபாடு உள்ளவர்கள் மட்டும் (உரிய அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க வேண்டும்)

1. குறைவான பார்வைத்திறன் (மூக்கு கண்ணாடி மூலம் பார்வை சரிசெய்யப்பட்டது)
2. உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)
3. குணப்படுத்தப்பட்ட தொழு நோய் (40 சதவீதம் கைகளின் முழு செயல்பாட்டுத்திறன் உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது)
4. திரவ வீச்சினால் பாதிக்கபட்டவர்கள்
5. குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான)

விதவைகள் கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பபடுள்ளது.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் / நகராட்சி / மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 29.04.2025 மாலை 5.45 மணி வரை மட்டுமே**

அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்கள்:

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ்
3. குடும்ப அட்டை
4. இருப்பிடச் சான்று
5. ஆதார் அட்டை
6. சாதிச் சான்று
7. விதவை/ கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்றோர் பெண்கள் சான்றிதழ்
8. மாற்றுத் திறனாளிகள், அதற்கான சான்றிதழ்

போன்றவற்றின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அஞ்சல் துறையின் மூலம் காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது ஏற்படும் காலதாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

வேறு அலுவலகங்களிலோ மற்ற அலுவலர்களிடமோ அளிக்கப்படும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. உரிய சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

| மாவட்டம் | ஊராட்சிஒன்றியம்/ மாநகராட்சி/ நகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| | | |

சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும்

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை/கணவர்பெயர் | |
| கைபேசி எண் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது | |
| ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சியின் பெயர் | |
| கல்வித் தகுதி ( சான்று இணைக்கப்பட வேண்டும்) குறைந்தபட்சம் 10 தோல்வி /தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| பிறந்த தேதி/ வயது | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | |
| ஆதரவற்ற விதவை/ ஆதரவற்ற பெண்/ கணவரால் கைவிடப்பட்டவரா? ஆம் எனில் (வட்டாட்சியரின் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| பணியிடம் கோரும் மையம்/ பள்ளியின் பெயர் | |

| | |
|---|---|
| **விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோ மீட்டருக்குள் இருத்தல் வேண்டும்)** | |

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

**நாள்:**

**இடம்:**

**இணைப்பு**

1.பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல்.

2.SSLC மதிப்பெண் சான்றிதழ் நகல்.

3.குடும்ப அட்டை நகல்.

4.ஆதார் அட்டை நகல்.

5.சாதிச் சான்றிதழ் நகல்.